# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பற்றி அறிந்துகொள்வோம்



ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பற்றி அறிந்துகொள்வோம்

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பற்றி அறிந்துகொள்வோம்

ISBN 978-955-8929-17-9

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 2014 |
| இரண்டாம் பதிப்பு | : | 2014 |
| மூன்றாம் பதிப்பு | : | 2015 (திருத்தியது) |

| | | |
|---|---|---|
| பதிப்பு: | : | விக்கும் கிராபிக் இல. 33, மாயா மாவத்தை, பத்திரகொட,மகரகம |
| ஆலோசகர்கள்: | : | சட்டத்தரணி நிமால் ஜி புஞ்சிகேவா<br>சட்டத்தரணி சமந்தி ஜயமான பரணகம |
| ஆக்கம்: | : | சட்டத்தரணி மேனகா ஹேரத்<br>சட்டத்தரணி க. கபிலன் வில்லவராஜன் |
| உதவி | : | துஷாரா ஜீவந்தி |
| வெளியீடு | : | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>இல. 165, கின்சி வீதி, கொழும்பு 08. |

ISBN 978-955-8929-17-9

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மக்களிற்கான செயற்றிட்டம்

**பொருளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| | அறிமுகம் | |
| 1.0 | தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின்ஸ்தாபிதம் | 1 |
| 2.0 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாபிக்கப்படுவதற்கு முன்னராக செயற்பட்ட மனித உரிமை நிறுவனங்கள் | 2 |
| 2.1 | விசேட கவனிப்பு அல்லது பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் மற்றும் அடிப்படை உரிமையினை கண்காணிக்கும் ஆணைக்குழு | 2 |
| 2.2 | மனித உரிமைகள் பணிப்படை | 3 |
| 3.0 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 4 |
| 3.1 | தொலைநோக்கு | 4 |
| 3.2 | பணிக்கூற்று | 4 |
| 3.3 | ஆணைக்குழுவின் இலச்சனை | 4 |
| 4.0 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைப்பு | 5 |
| 4.1 | ஆணைக்குழுவை தெரிவு செய்தல | 5 |
| 4.2 | ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்குதல | 5 |
| 5.0 | தத்துவங்கள் | 5 |
| 6.0 | ஆணைக்குழுவின் பணிகள் | 6 |
| 7.0 | ஆணைக்குழுவின் நிர்வாக கட்டமைப்பு | 7 |
| 7.1 | ஆணைக்குழுவின் பிரதான பிரிவுகள் | 8 |
| 7.1.1 | புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவு | 8 |
| 7.1.2 | கல்விக்கும் விசேட நிகழ்வுக்குமான பிரிவு | 8 |
| 7.1.3 | கண்காணிப்புக்கும் மீளாய்வுக்குமான பிரிவு | 9 |
| 7.1.4 | நிர்வாக மற்றும் நிதிப்பிரிவு | 10 |
| 7.2 | பிராந்திய காரியாலயங்கள் | 10 |
| 7.3 | நடமாடும் அலுவலகங்கள் | 11 |
| 8.0 | முறைப்பாடு செய்யும் வழிமுறையும் முறைப்பாட்டினை தீர்வு காணும் நடபடிமுறையும | 11 |
| 8.1 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு | 11 |
| | முறைப்பாடுகளை செய்யும் தொகுதியினர் | 11 |
| 8.2 | முறைப்பாடு செய்யும்வழி முறைகள் | 11 |
| 8.3 | முறைப்பாட்டில் உள்ளடக்க வேண்டிய விபரங்கள் | 12 |
| 8.4 | முறைப்பாட்டினை சமர்ப்பித்தல் | 13 |
| 8.5 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் | 13 |
| 8.6 | முறைப்பாட்டுடன் தொடர்புடைய பிரதிவாதிகளாக | 14 |

கொள்ளக்கூடியவர்கள் 15
8.7 முறைப்பாட்டினை விசாரணை செய்தல் 15
8.8 விசாரணையின் போது சமா்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் 17
8.9 விசாரணைக்கு சமூகமளித்தல் 17

9.0 தடுத்துவைக்கப்பட்டவா்களிற்கான நலன்புரி மற்றும் பாதுகாப்பு தொடா்பாக ஆணைக்குழுவின் இடையீடுகள். 17
9.1 தடுப்புக்கட்டளை 17
9.2 தடுப்பு நிலையங்களை பரிசோதித்தல் 18

10. துரித அழைப்பு வசதிகள் 18
11. ஆணைக்குழுவினால் விசேட அவதானம் செலுத்தப்படும் குழுக்கள்19

12. சித்திரவதை தொடா்பான இடையீடுகள் 21

13. ஆணைக்குழுவின் சொந்தப் பிரேரனை மூலமான விசாரணை (Own Motion) 22

14.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்க சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சா்வதேச பிராந்திய நிறுவனங்களுடன் இணைந்த செயற்படுதல். 22
14.1 அரச அமைப்புக்கள் 23
14.2 சிவில் சமூக அமைப்புக்கள் 23
14.3 சா்வதேச அமைப்புக்கள் 24
14.4 பிராந்திய அமைப்புக்கள் 24
14.4.1 ஆசிய பசுபிக் அமைப்பு 24
14.4.2 பொதுநலவாய நாடுகளின் செயலகம் - மனித உரிமைகளின் அலகு 25

15.0 ஆணைக்குழுவின் வகைசொல்லும் பொறுப்பு 25
15.1 ஆண்டறிக்கை 25
15.2 ஆவணப்படுத்தும் நிலையம் / நூலகம் 25
15.3 இணையத்தளம் 26

16.0 ஆணைக்குழுவை அவமதித்தல் குற்றம் 26

17.0 ஆணைக்குழு உத்தியோகத்தா்களுக்கான விசேட பாதுகாப்பு 27

18.0 முடிவுரை 27

இணைப்பு I : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடா்பு கொள்ளும் வழிமுறைகள் 28
இணைப்பு II : ஆணைக்குழுவின் வெளியீடுகள் 29-30

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது இலங்கையிலுள்ள ஒவ்வொருவரதும் மனித உரிமைகள், சட்டம், கொள்கை மற்றும் நடைமுறை என்பவைகளை பாதுகாக்கவும் முன்னேற்றவும் முயற்சிக்கின்றது.**

## மனித உரிமைகள் என்றால் என்ன?

**1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 33 இற்கமைய "மனித உரிமைகள்" என்பது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருந்தனையினாலும் பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் மீதான சர்வதேச பொருந்தனையினாலும் வெளிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஓர் உரிமை எனப் பொருள்படும்.**

## அறிமுகம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பரீஸ் கோட்பாட்டிற்கு அமைய இலங்கை அரசானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னெடுக்கவும் சுயாதீன தேசிய மனித உரிமைகள் நிறுவனமான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தாபித்துள்ளது.

மேற்படி ஆணைக்குழுவிற்கு நாட்டின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், கண்காணித்தல், முன்னேற்றல் மற்றும் மதியுரை வழங்குவதற்கான பரந்த அதிகாரங்கள் இச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ள அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பில் உயர் நீதிமன்றத்திற்கு அடுத்தபடியாக சகல மட்டத்திலான மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனமாக இவ் ஆணைக்குழு உள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நாட்டின் மனித உரிமை பிரச்சினைகள் சம்மந்தமாக கண்காணிப்பதுடன் அதனுடன் தொடர்புடைய நடைமுறையிலுள்ள சட்டம், கொள்கை, ஒழுங்கு விதிகள் மற்றும் நிர்வாக நடபடிமுறைகள் என்பவற்றை ஆய்ந்து சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களை நிலைநிறுத்தும் வகையில் அரசுக்கு மதியுரை வழங்குகின்றது. மேலும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்குமுரிய அரச கொள்கைகளை தயாரிப்பதற்கு அரசுக்கு அவசியமான மதியுரைகளை வழங்குவதுடன் அதனை அமுல்படுத்தும் போது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் செயற்பாடுகளைக் கண்காணிக்கின்றது. பொதுமக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகளிற்கு மனித உரிமைகள் தொடர்பாக விழிப்பூட்டுவதற்கு மனித உரிமைகள் கல்வியை ஆணைக்குழு வழங்குகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் தராதரம் மற்றும் நியமங்கள் நாட்டினுள் நிலைநிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் அரச மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கிடையேயான பாலமாகவும் செயற்படுகின்றது. அதேவேளை மனித உரிமைகள் பாதுகாவலரின் பாதுகாவலராகவும் ஆணைக்குழு செயற்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் கலாச்சாரத்தினை நிலைநாட்டுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பல்வேறு வழிகளில் முனைந்துவருகின்றது. அதன் ஒரு வழியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் உள்ளடக்கிய இச்சிறு கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனூடாக மக்களிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக மேலும் தெளிவினை பெற்றக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என நம்புகின்றோம்.

## 1.0 தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின்ஸ்தாபிதம்

ஒரு நாட்டின் பாராளுமன்றத்திற்கும் அரசுக்கும் மனித உரிமைகள் துறையில் அவசியமான மதியுரை வழங்குவதற்கு தேசிய மட்டத்திலான ஒரு நிறுவனமாக தேசிய மனித உரிமைகள் நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் நிறுவனத்தினூடாக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் நாட்டினுள் நிலைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 1993 இல் 48/134 பிரகடனத்தின் மூலம் தேசிய மனித உரிமைகள் நிறுவனம் தொடர்பான பரீஸ் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த பரீஸ் கோட்பாடுகள் மூலமாக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றல் தொடர்பாக பரந்த விடயங்களை வழங்குகின்றது. இவ்விடயப்பரப்பினுள் அரசுக்கும் பாராளுமன்றத்துக்கும் மற்றும் இவ்வாறான ஏனைய அதிகாரவமைப்புக்களுக்கும் மதியுரை வழங்கும் ஆற்றலினை தேசிய மனித உரிமைகள் நிறவனங்களுக்கு வழங்கியுள்ளது. நாட்டினுள் மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் முன்னேற்றலும், நாட்டின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் அறிக்கை தயாரித்தல் மற்றும் மனித உரிமைகள் கல்விக்கு அவசியமான உபாயமார்க்கங்களும் இப்பரீஸ் கோட்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பரீஸ் கோட்பாட்டின் மூலம் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் சுயாதீனமான செயற்பாட்டினையே மிக முக்கியமாக வலியுறுத்துவதை அவதானிக்ககூடியதாகவுள்ளது. இச்சுயாதீனமானது அரசினால் குறித்த நிறுவனத்திற்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்ற முறைமையும் மற்றும் தேவையான நிதி உதவி வழங்களிலுமே வெளிப்படுத்தப்படும். கடந்த இரு தசாப்தங்களாக தேசிய மனித உரிமைகள் நிறுவனம் உலகம் பூராகவும் பல்வேறு நாடுகளால் தாபிக்கப்பட்டுள்ளன. இவ் நிறுவனங்கள் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டாலும் அதன் பொது இயல்பானது தனது சுயாதீனமான செயற்பாட்டினை வெளிப்படுதலாகும். இவ் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் தற்போது நடைமுறையிலுள்ள சா்வதேச கருவிகளுடன் சேர்ந்து மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கும். தமது நாட்டினுள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ளவதே தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2010 இல் 64/1613 பிரகடனத்தின் மூலம் பரீஸ் கோட்பாட்டினை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் தேசிய மட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டினை முன்னெடுத்தல் மாத்திரமல்லாது தேசிய மட்டத்தில் சட்ட ஆட்சி மற்றும் நல்லாட்சி தொடர்பான கோட்பாட்டினை வலுவூட்டும் பொறுப்பும் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களுக்கான சர்வதேச ஒருங்கிணைப்பு குழுவின் (ICC) மூலமாக தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் பரீஸ் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படுகின்றதா எனக் கண்காணிக்கப்படுகின்றது.

இலங்கையில் தேசிய மனித உரிமைகள் நிறுவனமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காணப்படுகின்றது.

## 2.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தாபிக்கப்படுவதற்கு முன்னராக செயற்பட்ட மனித உரிமை நிறுவனங்கள்

1996 இல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தாபிக்கப்படுவதற்கு முன்னர் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசினால் காலத்திற்கு காலம் பல்வேறு மனித உரிமை நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முக்கியமான நிறுவனங்கள் பின்வருமாறு,

## 2.1 விசேட கவனிப்பு அல்லது பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் மற்றும் அடிப்படை உரிமையினை கண்காணிக்கும் ஆணைக்குழு

தேசிய அரசுப்பேரவையினால் சட்டமாக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 31 இலக்க இலங்கை மன்ற கல்லூரிச்சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்தின் அடிப்படையில் இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. குறித்த சட்டத்தின் 19 ஆம் பிரிவுக்கமைய இலங்கை மன்றக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய பிரகடனம் மேற்கொள்ளப்பட்டு ஜனாதிபதியின் அனுமதிக்கு பின்னர் 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இவ் ஆணைக்குழுவில் தவிசாளர் உள்ளடங்களாக 10 உறுப்பினர்கள் உள்ளனர். இதன் காலம் மூன்று வருடங்களாகும்.

இவ் ஆணைக்குழுவானது இனம், மதம், மொழி, சாதி,பால், அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் ஆகிய காரணங்களிற்கமைய அரசு, அரச கூட்டுத்தாபனம்,மாகாண நிறுவனங்கள், அரச வியாபார நிறுவனங்கள் அல்லது 50% மேற்பட்ட பங்குகளைக் கொண்ட அரச பொதுக்கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் விசேட கவனிப்பு அல்லது பாரபட்சம் காட்டுதல் என்பவற்றை இல்லாதொழிக்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் தொடர்பாக கண்காணிப்புச் செய்தலும் ஆணைக்குழுவின் ஓர் செயற்பாட்டினுள் அடங்கும்.

விசேட கவனிப்பு அல்லது பாரபட்சம் காட்டப்படுதல் தொடர்பான முறைப்பாடுகள் சம்பந்தமாக மனித உரிமைகள் பணிப்பாளரினால் விசாரணைகள் நடைபெறும், கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும், மத்தியஸ்தம் செய்யப்படும் மற்றும் அவ்முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் வழங்கப்படும். அவ்வாறான தீர்வுகளை வழங்கும்போது பணிப்பாளர் அசௌகரியங்களை எதிர்கொண்டால் அவர் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்பிப்பார். ஆணைக்குழு அது தொடர்பாக மத்தியஸ்தம் செய்து சமரசமூடாக பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர முயலும்.

## 2.2 மனித உரிமைகள் பணிப்படை

1973 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை மன்றக் கல்லூரிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் மனித உரிமைகள் பணிப்படை தாபிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதியிடப்பட்ட 673/2 இலக்க வர்த்தமாணி அறிவித்தலினூடாகபொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் பிரிவு 5 இன் கீழாக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோரின் மனித உரிமைகள் தொடர்பாக கண்காணிப்பதற்கும் அவதானிப்பதற்குமாக மனித உரிமைகள் பணிப்படை தாபிக்கப்பட்டது.

தடுப்பு நிலையங்களின் நிலைமைகளை கண்காணித்தல், தடுத்து வைக்கப்பட்டோரிற்கு நலன்புரி செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டோர் தொடர்பிலான சகல முறைப்பாடுகளையும் தகவல்களையும் குறைகளையும் பெற்றுக்கொள்ளலும் அது தொடர்பாக விரைவாக செயற்பட்டு அவசியமான தீர்வுகளை வழங்கலும் இவ் பணிப்படையினரின் பிரதான செயற்பாடாகும்.

## 3.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்திற்கு அமைய நாட்டினுள் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றுவதற்காகவும் தாபிக்கப்பட்ட சுயாதீனமான ஆணைக்குழுவாகும். இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பில் விசாரணை செய்தல் ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடாகும். இதனை மேற்கொள்ள ஆணைக்குழுவிற்கு பரந்த தத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.1 தொலைநோக்கு

அனைவருக்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும் சட்டத்தின் ஆட்சியை ஊக்குவித்துப் பாதுகாப்பதுமே தொலைநோக்காகும்.

## 3.2 பணிக்கூற்று

அனைவருக்குமான மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிக்கும் நோக்கில் பணியாற்றும் சகல பங்காளிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புடன், இலங்கைப் பிரஜைகளுக்காக இலங்கை அரசியலமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை விஷேடமாக வலியுறுத்தி, சா்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமை நியமங்களையும் கோட்பாடுகளையும் கடைப்பிடித்து சட்டம், கொள்கை மற்றும் செயற்பாட்டால் மனித உரிமைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் சிறந்த மனித உரிமைகள் கலாசாரத்தை விருத்தி செய்வதே பணிக்கூற்றாகும்

## 3.3 ஆணைக்குழுவின் இலச்சனை

இலச்சனையில் நீல வா்ணம் மக்களின் உயிரோட்டத்தையும் புத்தாக்கத்திறனையும் குறிப்பதுடன் இரண்டு கரங்களும் பாதுகாப்பையும் பாதுகாப்பு தொடா்பாக செயற்படுவதையும் குறித்து நிற்கின்றது. உலகபந்து மனித உரிமைகள் என்பது உலகலாவியது என்பதையும் சா்வதேச மட்டத்தில் பாதுகாப்பையும் சுட்டி நிற்கின்றது. இலங்கை குறித்து நிற்பது மனித உரிமைகளிற்கான தேசிய ரீதியிலான பாதுகாப்பையும் அதனை அமுல்படுத்தலையுமாகும்.

## 4.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அமைப்பு

### 4.1 ஆணைக்குழுவை தெரிவு செய்தல்

இலங்கை அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்திற்கு அமைய பாராளுமன்ற பேரவையின் சிபார்சுக்கு அமைய ஜனாதிபதியினால் ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். ஆணைக்குழுவினர் மனித உரிமைகள் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாகவும் அதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருப்பதுடன் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்களாக ஐந்து உறுப்பினர்களை கொண்டிருக்கும். இவ் ஐவரில் ஒருவர் தவிசாளராக தெரிவு செய்யப்படுவார். இவர்களின் காலம் 3 வருடங்களாகும்.[1]

### 4.2 ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்குதல்

ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் நீதிமன்றினால் கடனிறுக்க வகையற்றவர் எனத்தீர்பளிக்கப்பட்டிருந்தால், மன மற்றும் உடல் தகுதியற்றவராயின், சித்தசுவாதீனமற்றவராயின், ஒழுக்க சீர்கேடுகள் சம்பந்தமான குற்றவாளியாயின் மற்றும் ஆணைக்குழுவில் விடுப்பை பெறாது தொடர்ச்சியாக மூன்று கூட்டத்திற்கு சமூகமளிக்கத்தவறினும் ஜனாதிபதியால் நீக்கப்படலாம்[2].

மேலும் எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது ஆற்றலின்மை அடிப்படையில் அகற்றும்படி கூறும் பாராளுமன்ற பிரேரணையால் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் எடுக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்பட்டு ஜனாதிபதியால் ஆக்கப்படும் கட்டளைக்கமைய நீக்கப்படுவர்[3].

ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நீக்கும் நடபடிமுறையினை அவதானிக்கும்போது ஆணைக்குழுவின் சுயாதீனமான செயற்பாட்டிற்கு அது வலுக்கொடுப்பதாகவே அமைகின்றது.

## 5.0 தத்துவங்கள்

ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 11 இல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கீழ்வரும் தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றினுள் சிலவற்றையோ அல்லது முழுமையாகவோ ஆணைக்குழுச் செயற்பாட்டிற்கு பாவிக்கப்பட முடியும்.

[1] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 3
[2] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 4(1) (அ)
[3] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 4(1) (ஆ)

I. அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பில் புலனாய்வு மற்றும் விசாரணையை மேற்கொள்ளல்.

II. எந்த நீதிமன்றத்திலும் முடிவுறாத அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கில் அவ்நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற செயற்பாடுகளில் இடையீடு செய்தல்.

III. தடுப்பு நிலையங்களை பரிசோதித்தலும் தடுப்பிலுள்ளவர்களின் நலன்புரிகளை கண்காணித்தலும் தேவையான சிபாரிசுகளை முன்வைத்தலும்.

IV. உயர் நீதிமன்றத்தினால் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தும் எந்தவொரு பிரச்சினைகள் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் பணிப்புக்கமைய நடவடிக்கை எடுத்தல்.

V. மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவ் ஆய்வு முடிவுகளை மக்களிடையே பரப்புதலும் விநியோகித்தலும் அதற்காக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல்.

VI. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு பொருத்தமானதும் அவசியமானதுமான ஏற்புடைய ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

## 6.0 ஆணைக்குழுவின் பணிகள்

ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 இன் கீழ் ஆணைக்குழுவின் பணிகள் பின்வருமாறு,

I. சகல அரச செயற்பாடுகளும் இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கமைய செயற்படுவதை உறுதிப்படுத்தல்.

II. அடிப்படை உரிமைகளுக்கமைய சட்டங்களை ஆக்கல், நிர்வாக நடப்படிமுறைகள் மற்றும் செயற்திட்டங்கள் தயாரிக்கும் போது அரசுக்கு உதவுதல் மற்றும் மதியுரை வழங்குதல்.

III. அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது மீறப்பட்டுள்ளமை தொடர்பிலான முறைப்பாடுகளை புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தலும்.

IV. இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையின் கடப்பாடுகளிற்கு அமைய சட்டம் மற்றும் நிர்வாக நடபடிமுறைகள் சம்பந்தமாக அரசுக்கு பரிந்துரை வழங்கல்.


V. சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் மனித உரிமைகள் துறையில் சர்வதேச தீர்மானங்கள் தொடர்பில் அரசுக்கு மதியுரை வழங்குதல்.

VI. நாட்டினுள் மனித உரிமைகள் தொடர்பான அறிவை முன்னேற்றல்.

## 7.0 ஆணைக்குழுவின் நிர்வாக கட்டமைப்பு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைய ஆணைக்குழுவின் செயற்பாடுகளை முன்னெடுக்க செயலாளர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமிக்கலாம்[4].

ஆணைக்குழுவானது தனது செயற்பாட்டினை வினைத்திறனாக செய்வதற்காக தலைமைக் காரியாலயத்தில் செயலகம், 4 பிரிவுகள் மற்றும் 10 பிராந்திய அலுவலகங்களையும் உருவாக்கியுள்ளது. அது மட்டுமல்லாது விசேட தேவைகளின் பொருட்டு நடமாடும் காரியாலயங்களையும் தாபித்துள்ளது.




[4] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 22

## 7.1 ஆணைக்குழுவின் பிரதான பிரிவுகள்

ஆணைக்குழுவின் பிரிவுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவு
2. கல்வி மற்றும் விசேட நிகழ்வுகளுக்குமான பிரிவு
3. கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு
4. நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவு

### 7.1.1 புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவு

இவ் பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு,

- அடிப்படை உரிமை மீறல் தொடர்பான ஆணைக்குழுவிற்கு நேர்த்தியாக முறைப்பாடுகளை செய்வதற்கு மக்களின் முறைப்பாடுகளை முதலில் செவிசாய்த்தலும் அவற்றுக்குரிய மதியுரைகளை வழங்கலும்
- தனிப்பட்ட முறைப்பாடுகளைக் கையாள்தல்
- ஆணைக்குழு சொந்தப்பிரேரணை மூலம் பெற்ற முறைப்பாடுகளை கையாள்தல்
- உயர்நீதிமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்படும் முறைப்பாடு தொடர்பில் உதவி வழங்கல்
- விசேட புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ளல்.
- பொலிஸ் நிலையங்கள் , தடுப்பு நிலையங்கள், சிறைச்சாலைகள் மற்றும் அரச வர்த்தமாணி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட வீடுகளிலுள்ள தடுப்பு இடங்கள் ஆகியவற்றை பரிசோதித்தல் மற்றும் தடுத்து வைத்துள்ளோரின் நிலைமைகளை கண்காணித்து அது தொடர்பாக உரிய பரிந்துரைகளை வழங்கல்.
- உரிய இடங்களிலிருந்து அனுப்பப்படும் தடுப்பு கட்டளைகளை பராமரித்தலும் கண்காணித்தலும்.
- துரித அழைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் சித்திரவதை, எதேச்சை அதிகாரமான கைது, தடுத்து வைத்தல் தொடர்பிலான முறைப்பாடுகளை உரிய அதிகாரவமைப்புகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தல்.

### 7.1.2 கல்விக்கும் விசேட நிகழ்வுக்குமான பிரிவு

மேற்படி பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு

- சமூகத்திலிருக்கும் அவதானம் செலுத்த வேண்டிய குழுக்கள் மற்றும் நிவாரணங்கள் பெறும் குழுக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவும் முன்னேற்றவும் நிகழ்வுகளை தயார்படுத்தல் (உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள், புலம் பெயர் தொழிலாளர்கள், சிறுவர், பெண்கள், விசேட தேவையுடைய ஆட்கள், தோட்டத் தொழிலாளர்கள், முதியோர்)

- மேற்படி நிகழ்வுகளை நடாத்துதல்.

- அவதானத்திற்குள்ளான குழுக்கள் மற்றும் நிவாரணங்கள் பெறும் குழுக்களின் சேமநலன்களை கவனிக்கும் அதிகாரவமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

- மேற்படி நபர்கள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்து வெளியிடல்.

- தமது அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தவும் மீறப்படும்போது நிவாரணங்களைப் பெறும் முறை தொடர்பாகவும் மக்களிற்கு விழிப்பூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அதன்போது,

- மக்களிற்கு விழிப்பூட்டல் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்வுகள்

- அரச சார்ப்ற்ற நிறுவனங்களை வலுவூட்டல்

- வெவ்வேறு இலக்கு குழுக்களுக்கு மனித உரிமைகள் கல்வி நிகழ்வுகளை நடாத்துதல்

- மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி கைநூல், கையேடு மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல்.

### 7.1.3 கண்காணிப்புக்கும் மீளாய்வுக்குமான பிரிவு

இப்பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

- தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் உருவாக்கப்படும்

புதிய சட்டங்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கோ அல்லது சர்வதேச மனித உரிமைகள் தராதரங்கள் மற்றும் நியமங்களுக்கோ அமைவானதா என ஆராய்ந்து பார்த்தல்.

- நடைமுறையில் இருக்கும் அல்லது எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் அவசரகால ஒழுங்குவிதிகள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தராதரத்திற்கு அமைவானதா என்பதை கண்காணித்தல்.

- அரச நிறுவனங்களின் நிர்வாக செயற்பாடுகளின்போது அடிப்படை உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்தல்.
- அரச நிறுவனங்கள் அவர்களது ஊழியர்கள் மற்றும் மக்கள் சம்பந்தமான செயற்பாடுகளில் அடிப்படை உரிமைகள் மீறப்படாதவகையில் செயற்படுவது தொடர்பாக பொது வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் முன்னர் இடம்பெற்றவை தொடர்பாக ஆராய்ந்து பார்த்தல்.

- விசேட நிகழ்வுகள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களை திரட்டல்

### 7.1.4 நிர்வாக மற்றும் நிதிப்பிரிவு

மேற்படி பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு,

- ஆணைக்குழுவின் சகல நிர்வாக மற்றும் நிதிவிடயங்களை கையாள்தல்.

- மனித வள முகாமைத்துவம் செய்தல்

- காரியாலய ஊழியர்களிற்கு அவசியமான அடிப்படை வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் ஏனைய காரியாலயத்திற்கு தேவையான ஏனைய வசதிகளை செய்தலும் பராமரித்தலும்.

- ஆண்டு வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்.

## 7.2 பிராந்திய காரியாலயங்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நாடளாவிய ரீதியில் செயற்படும் வகையிலும் சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையிலும் 10

பிராந்திய காரியாலயங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. பிரதான காரியாலயத்தில் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளும் பிராந்திய காரியாலயத்தினாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

மாத்தறை, கண்டி, அம்பாறை, கல்முனை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு , திருகோணமலை, பதுளை, வவுனியா மற்றும் அநுராதபுதரம் ஆகிய பிரதேசங்களில் இப்பிராந்திய காரியாலயங்கள் உள்ளன.

### 7.3 நடமாடும் அலுவலகங்கள்

கிளிநொச்சி, புத்தளம் மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நடமாடும் அலுவலகங்கள் வாரத்தில் குறிக்கப்பட்ட நாளில் மக்களிற்கு மதியுரை வழங்கவும் முறைப்பாட்டை பெற்றுக் கொள்ளவும் திறக்கப்பட்டுள்ளன.

## 8.0 முறைப்பாடு செய்யும் வழிமுறையும் முறைப்பாட்டினை தீர்வு காணும் நடபடிமுறையும்

### 8.1 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை செய்யும் தொகுதியினர்

மக்கள் இலகுவாக முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் ஆணைக்குழு சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன. அவ்வாறான முறைப்பாடுகளைச் ஆணைக்குழுவிற்கு கீழ் வருவோர் சமர்ப்பிக்கலாம்.

- பாதிக்கப்பட்ட நபர்
- பாதிக்கப்பட்ட குழு
- பாதிக்கப்பட்ட நபர் அல்லது குழுவின் சார்பாக சமூகமளிக்கும் நபர் அல்லது குழு
- ஊடகங்கள் ஊடாக அல்லது வேறு வகையில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கண்டறியப்படின் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு கிடைக்கப்பெறாவிடினும் சொந்தப் பிரேரணையூடாக அவசியமான நடவடிக்கையினை எடுத்தல்[5].

### 8.2 முறைப்பாடு செய்யும்வழி முறைகள்

அரசியலமைப்பில் அரசகரும மொழிகளாகவுள்ள சிங்களம், தமிழ் மற்றும் இணைப்பு மொழியான ஆங்கிலம் ஆகிய எந்த மொழியிலும் முழு விபரங்களையும் உள்ளடக்கிய முறைப்பாட்டினை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் முறைகள் பின்வருமாறு,

[5] 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 5


- ஆணைக்குழுவினால் இலவசமாக விநியோகிக்கப்படும் மும்மொழிகளிலுமான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம். (பிரதான காரியாலயம் / பிராந்திய காரியலயங்கள்/ ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்)

- கடிதம் மூலம்

- தொலைநகல் மூலம்

- மின்னஞ்சல் மூலம்

- துரித அழைப்பு மூலம் ( சித்திரவதை, எதேச்சை அதிகாரமான கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பான முறைப்பாடு)




### 8.3 முறைப்பாட்டில் உள்ளடக்க வேண்டிய விபரங்கள்

முறைப்பாடானது குறைந்தபட்சம் பின்வரும் விபரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- மீறப்பட்ட உரிமை தொடர்பான விபரம்

- மீறல் எவ்வாறு நிகழ்ந்தது?

- அதற்கு பொறுப்பானவர் / கள் யார்?

- மீறல் எங்கே இடம்பெற்றது?

- எதிர்பார்க்கும் நிவாரணம் என்ன?

## 8.4 முறைப்பாட்டினை சமர்ப்பித்தல்

தினமும் வரும் முறைப்பாட்டாளர்களிற்கு உரிய வழிகாட்டல்களை வழங்க வார நாட்களில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக்குழுவின் ஆணைக்குள் வரும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டு பதிவு இலக்கம் வழங்கப்படும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணைக்குள் வராத முறைப்பாடுகள் பின்வருவனவாகும்,

- அடிப்படை உரிமைகள் அல்லாத முறைப்பாடுகள்
- வேறு நீதிமன்றங்கள் மற்றும் நியாயசபைகளில் விசாரணைகள் இடம்பெறும் முறைப்பாடுகள்.
- காலம் கடந்த முறைப்பாடுகள் (முறைப்பாட்டின் தன்மைக்கமைய ஆணைக்குழு காலவரையரையை தீர்மானிக்கும்)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் முறைப்பாட்டாளர்களிற்கு ஆணைக்குழு தெரிவிப்பதுடன் அவ்விடயத்துடன் தொடர்புடைய அதிகாரவமைப்புக்கு முறைப்பாடு செய்வதற்குரிய அவசியமான வழிகாட்டல்களையும் மதியுரைகளையும் வழங்கும்.

முறைப்பாட்டினை தலைமைக் காரியாலயம் மற்றும் சகல பிராந்திய நிலையங்களிலும் வார நாட்களில் அலுவலக நேரத்தில் (மு.ப 8.15 முதல் பி.ப 4.15 வரை) சமர்ப்பிக்கலாம்.

## 8.5 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள்

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் அத்தியாயம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது முறைப்பாடு செய்ய முடியும். அதற்கமைய ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் சில முறைப்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- சித்திரவதை இழிவான மனிதாபிமானமற்ற நடத்துகை
- சட்டத்திற்கு புறம்பான ஆட்கடத்தல், ஆட்கவர்தல் மற்றும் காணாமற்போதல்.

- எதேச்சதிகாரமான முறையில் கைது செய்யப்படல்.
- சாதி, மதம், மொழி,பால், அரசியல் கொள்கை அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படல்.
- அரச நிறுவனங்கள் குறித்த விடயத்தினை செய்யாதிருத்தல். (இருக்கும் சட்டங்கள் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நிறுவன அதிகாரிகள் செயற்படாது இருத்தல்.)
- அரச நிறுவனங்களிலுள்ள சேவைபுரிவோரின் பிரச்சினைகள்.
- பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதித்தல்.
- ஒழுக்காற்று நடவடிக்கையின் போது அமுலிலுள்ள சட்டதிட்டங்களிற்கு அமைய மேற்கொள்ளாது விடல்.
- கருத்து வெளிப்படுத்தல் மற்றும் ஒன்றுகூடல் தொடர்பான பிரச்சினைகள்.

## 8.6 முறைப்பாட்டுடன் தொடர்புடைய பிரதிவாதிகளாக கொள்ளக்கூடியவர்கள்

அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அல்லது மீறப்பட்டுள்ளபோது பிரதிவாதிகளாகக் காணப்படக் கூடியவர்கள் பின்வருமாறு[6]

(i) நிறைவேற்றுத்துறையினரின் செயற்பாட்டினால் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது பிரதிவாதிகளாக இனங்காணக்கூடியவர்கள்

- சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
- மாகாண சபை, மாநகர சபை, நகர சபை , பிரதேச சபைகளின் செயலாளர்கள்.
- பொலிஸ் திணைக்களம்
- முப்படைகள்

(ii) நிர்வாகத்துறையினரின் செயற்பாட்டினால் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது பிரதிவாதிகளாக இனங்காணக்கூடியவர்கள்

- சகல திணைக்களங்கள்
- அதிகாரசபைகள்

[6] 1996ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 4

- கூட்டுத்தாபனம்
- சபைகள்
- ஆணைக்குழுக்கள்
- 50% க்கு மேற்பட்ட பங்குகளை கொண்டுள்ள அரச கம்பனிகள்

(iii) 1979 ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் குற்றச் செயற்பாட்டின் போது கைது செய்யப்பட்ட நபர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விசாரணை உத்தியோகத்தர்கள்.

## 8.7 முறைப்பாட்டினை விசாரணை செய்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் புலனாய்வு மற்றும் விசாரணை செய்யும் போது ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 18 இன் கீழ் பின்வரும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- முறைப்பாட்டிற்கு அவசியமான எழுத்தினாலான அல்லது வாய்மூல சான்றுகளை பெற்றுக்கொள்ளலும் அவர்களை பரிசீலித்தலும்.
- விசாரணைக்கு அவசியமான சகல நபர்களையும் சாட்சியாளர்களையும் விசாரணை செய்தல்.
- சாட்சியாளர்களின் சத்தியம் அல்லது உறுதியுரையை (எழுத்து அல்லது வாய்மூலம்) பெற்றுக் கொள்ள றெபாடு செய்தல்.
- சில இடங்களில் ஆவணங்கள் அல்லது வேறேதனையும் சமர்ப்பிக்க வேண்டுதல்.

முறைப்பாடு செய்யும் வழிமுறை மற்றும் முறைப்பாடு தீர்வு காணும் நடப்படிமுறைகள் மரவரிப்படம் 1 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடானது ஆணைக்குழுவின் ஆணைக்குள் வருமாயின்


- முறைப்பாட்டுடன் தொடர்புடைய பிரதிவாதியிடமிருந்து அறிக்கை கோரப்படும்.
- குறித்த அறிக்கையின் பிரதி முறைப்பாட்டாளரின் அவதானிப்புக்களைப் பெற்றக்கொள்ள அனுப்பி வைக்கப்படும்.

- இரு தரப்பினரின் காரணங்களைக் கவனத்திற்கொண்டு அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பில் இணக்கப்பாடு அல்லது சமரசம் செய்வதற்காக இரு திறத்தவர்களிற்கும் அழைப்பாணையை ஆணைக்குழு விடுக்கும்[7].

- இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் குறித்த முறைப்பாட்டினை சமரசம் செய்ய முடியாதென ஆணைக்குழு கருதினால் குறித்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் கட்சிக்காரர் மற்றும் பிரதிவாதிக்கு பரிந்துரைகள் வழங்கப்படும்[8].

- ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்படும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் குறித்த பரிந்துரைகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவரால் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும்[9].

### முறைப்பாட்டினை தீர்வுகாணும் படிமுறை




7 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 15(2),20,16
8 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 15(3),(4)
9 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 15(8)

## 8.8 விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- பாதிக்கப்பட்டநபரின் பிரகடனம் / சத்தியக் கடதாசி
- நிகழ்வுடன் தொடர்புடைய சாட்சியாளர்களின் பிரகடனம் / சத்தியக் கடதாசிகள்
- சித்திரவதையாயின் குறித்த நபர் தொடர்பான சட்ட வைத்திய அறிக்கை / வேறேதும் வைத்திய அறிக்கை / வேறு தகவல்கள்

## 8.9 விசாரணைக்கு சமூகமளித்தல்

முறைப்பாட்டாளர் / கள் மற்றும் பிரதிவாதி/கள் குறித்த திகதியில் குறித்த நேரத்தில் மற்றும் குறித்த இடத்திற்கு விசாரணையுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் சமூகமளித்தல் வேண்டும். விசாரணையின்போது முறைப்பாட்டாளர்/கள் மற்றும் பிரதிவாதி/கள் தாமாகவே சமூகமளிப்பதுடன் சட்டத்தரணிகளின் உதவியையும் நாடலாம் இருப்பினும் சட்டத்தரணிகள் சமூகமளிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

## 9.0 தடுத்துவைக்கப்பட்டவர்களிற்கான நலன்புரி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக ஆணைக்குழுவின் இடையீடுகள்.

ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமைய தடுத்து வைக்கப்பட்டவர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக ஆணைக்குழுவானது விசேட கவனப்பாட்டினை கொண்டிருப்பதுடன் தடுப்புக் காவல் இடங்களின் நலன்புரி மற்றும் தடுப்பு நிலைமைகளை கிரமமாக பரிசீலனை செய்வதன் மூலம் கண்காணிக்கப்படுகின்றன[10] .

## 9.1 தடுப்புக்கட்டளை

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் (தற்காலிகம்) கீழாகவோ பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைசட்டத்தின் கீழாகவோ கைது செய்யப்பட்டு தடுப்பு கட்டளைக்கமைய தடுத்து வைத்திருக்கும் நபர்களின் விபரங்கள் அல்லது அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்படும் விபரங்கள் 48 மணித்தியாலயத்திற்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்[11].

---

[10] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 11(ஈ)

[11] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 28(1)

இக்கடமையை செய்யத்தவறும் உத்தியோகத்தர் குற்றமிழைத்தவராக கருதப்படுவதுடன் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்கிற்கமைய ஒரு வருடத்திற்கு குறையாத சிறைத்தண்டனை அல்லது 5000/- ரூபாய் தண்டம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டம் வழங்கப்படலாம்[12]

## 9.2 தடுப்பு நிலையங்களை பரிசோதித்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 11 (ஈ) மற்றும் பிரிவு 28(2) இற்கு அமைய எவ்வேளையிலும் எந்நேரத்திலும் நீதிமன்றத்தின் கட்டளை

அல்லது வேறுவகையில் தடுத்துவைக்கப்பட்டோர் உள்ள ஏதேனும் கீழ் குறிப்பிட்ட இடங்களிற்கு கிரமமாக கண்காணிப்புச் செய்ய முடியும்.

- சகல பொலிஸ் நிலையங்கள்
- சிறைச்சாலைகள்
- தடுப்பு நிலையங்கள்
- படைகளின் தடுப்பு முகாம்கள்
- திறந்த வெளி சிறைச்சாலைகள்
- புனர்வாழ்வு முகாம்கள்
- அரச சிறுவர் இல்லங்கள்
- மனநோய் வைத்தியசாலைகள்
- ஏனைய தடுப்பு முகாம்கள் / நிறுவனம்

பிரதான காரியாலயம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுடாக இவ்வாறான இடங்களை பரிசோதிக்கும்போது கீழ் குறிப்பிடப்பட்ட தடுப்பு நிலைமைகளை கண்காணித்து பொருத்தமான பரிந்துரைகளை பொருத்தமான அதிகாரவமைப்புக்களிற்கு வழங்கும்.

- தடுத்துவைக்கப்பட்டோரின் தடுப்பு நிலைமை குறைபட்ச வசதிகளின் கீழ் கொண்டு நடாத்தப்படுதல்.
- சட்டத்திற்கு முரணாக தடுத்து வைக்கப்பட்டிருத்தல்.

---

[12] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 28(3)

- சித்திரவதை இழிவான மனிதாபிமானமற்ற முறையில் நடாத்தப்படல்.
- சட்டத்தரணிகளின் உதவிகளை பெற்றுக் கொள்ள உள்ள வசதிகள்
- உறவினர்கள் / நண்பர்கள் பார்வையிடுவதற்குள்ள வசதிகள்
- தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் சகல மனித உரிமைகள் நிலைமைகளையும் தேடிப்பார்த்தல்
- உணவு மற்றும் உடைகள்
- சுகாதார வசதிகள்

## 10. துரித அழைப்பு வசதிகள்

சித்திரவதை மற்றும் எதேச்சதிகாரமான கைது மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பில் 24 மணித்தியாலமும் இயங்கும் துரித அழைப்பு சேவையான 1996 இலக்கம் மூலம் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கும் வசதிகள் பொதுமக்களிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




## 11. ஆணைக்குழுவினால் விசேட அவதானம் செலுத்தப்படும் குழுக்கள்

சிறுவர்,பெண்கள்,புலம்பெயர் தொழிலாளர்கள், விசேட தேவையுடைய ஆட்கள், முதியோர் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் ஆகியோரின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. சிறுவர் தொடர்பாக செயற்படும் தேசியப் பொறிமுறைகளை வழுவூட்டல் மற்றும் வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பாக பல்வேறு பயிற்சி

நிகழ்ச்சிகள் மற்றும் உயர்மட்டக் கலந்துரையாடல்களை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சிறுவர் தொடர்பாக செயற்படும் அமைப்புக்களுடனும் மேற்கொண்டு வருகின்றது. அரச தடுப்பு நிறுவனங்கள் மற்றும் அந்நிறுவனங்களிலுள்ள சிறுவர்கள் தொடர்பாக செயற்படும் அதிகாரிகளுக்கான வழிகாட்டல் ஒன்றும் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது தனது அவதானத்தை செலுத்தி பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டில் குடும்பவன்முறை சட்டமூலத்தை பாரளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு பல்வேறு வழிகளில் இடையீடுகள் செய்து இறுதியில் அது சட்டமாக்கப்பட்டது. அதேவேளை அரச நிறுவனங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகள் தொடர்பாக கவனம் செலுத்தி அது தொடர்பான கொள்கையினை உருவாக்கியதுடன் அதனை பெண்கள் அமைச்சினூடாக சகல அரச நிறுவனங்களுக்கும் சுற்று நிருபமாக வெளியீட உதவியது. இன்றுவரை இக்கொள்கையினை அரசின் பல்வேறு நிறுவனங்கள் அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது. அது மட்டுமல்லாது தெருச்சுற்றிகள் சட்டத்திற்கு அமைவாக அலைந்து திரியும் பெண்களை தடுத்து வைத்திடும் மெத்செவன என்னும் அரச இல்லம் தொடர்பாக தகவல் கண்டறியும் செயற்பாட்டினை மேற்கொண்டு அது தொடர்பாக பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. அதன் மூலம் குறித்த இல்லம் ஒப்பீட்டளவில் பாரிய முன்னேற்றத்தினை ஆணைக்குழுவின் இடையீட்டினால் பெற்றுக் கொண்டது.

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது ஒரு மையத்தினை உருவாக்கியுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்கள் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் வெளிநாடுகளிலுள்ள இலங்கை உயர்தானிகர்கள் மற்றும் அதிகாரிகளுக்காக விசேட மதியுரைகளை வழங்கியுள்ளது. அதே வேளை புலம்பெயர் தொழிலாளர்கள் தொடர்பாக பணியாற்றும் அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. மனித வஞ்சக்கடத்தல் தொடர்பாக பல்வேறு விழிப்பூட்டல் நிகழ்வுகளை் மேற்கொண்டது.

உடல் அங்கவீனமானவர்கள் மற்றும் முதியோர் தொடர்பான உரிமைகளை பாதுகாப்பதற்கு விசேட அவதானம் செலுத்தி வருகின்றது. உடல் அங்கவீனமானவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கட்டிடங்களை அணுகுவதற்கு ஏற்ற வழிகளை செய்ய வேண்டும் என

உயர்நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்ட SC/(FR)221/2007 என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை உரிய முறையில் நிறுவனங்கள் அமுல்படுத்துகின்றதா என்பது தொடர்பில் சகல அரச நிறுவனங்களையும் அழைத்து விசேட கலந்துரையாடல்களை ஆணைக்குழு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க வயது அங்கவீனமானவரை பாதுகாத்தல் தொடர்பிலான சட்டத்தின் திருத்தச்சட்டமூலத்தை சமர்பிக்க முற்பட்ட போது அது தொடர்பாக உரிய முறையில் அங்கவீனமானவருடன் கலந்தாலோசிக்கப்படவில்லையென ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளிற்கு அமைய ஆணைக்குழு தலையீடு செய்து அவர்களுக்கும் பங்களிப்பதற்குரிய உரிமையை பெற்றுக்கொடுத்ததுடன் புதிய சட்டமூலத்திற்குரிய புதிய உள்ளீடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

தற்போது முதியோர் தொடர்பாக சர்வதேச சமவாயம் ஒன்றினை தயாரிக்கும் பணியில் முதியோர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட தொழிற்பாடும் விசேட குழுவொன்று தயாரித்து வருகின்றது. குறித்த செயற்பர்டு ஆணைக்குழுவினால் முதியோர் தொடர்பாக தேசிய மட்டத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அடிப்படையில் ஆணைக்குழு தனது கருத்துகளை 2012 ஆம் ஆண்டு குறித்த் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 12. சித்திரவதை தொடர்பான இடையீடுகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சித்திரவதை தொடர்பாக அதிவிசேட அவதானிப்புகளை மேற்கொண்டு வருகின்றது. இது தொடர்பாக 2004 ஆம் ஆண்டு ஆணைக்குழுவினால் சித்திரவதையை முற்றாக இல்லாமல் செய்யும் கொள்கையை (Zero Tolerance Policy on Torture) அறிமுகப்படுத்தியது. இதற்கமைவாக சித்திரவதை தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறின் 24 மணித்தியாலத்திற்குள் புலனாய்வு செய்து முடிக்க வேண்டும். அதேவேளை சந்தேக நபர்களின் உரிமைகள் தொடர்பான சுவரொட்டிகளை சகல பொலிஸ் நிலையத்திற்கும் மும்மொழிகளில் அச்சிட்டு காட்சிப்படுத்தி அறிவுறுத்தப்பட்டது.

ஆணைக்குழு சித்திரவதைகளை இல்லாதொழிப்பதற்கு மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளை பொலிஸாருக்கு ஏற்பாடு செய்ததுடன் பல்வேறு பொதுமக்கள் கேட்புகளையும் நாடலாவிய ரீதியில் ஏற்பாடு செய்து

சமூகத்திலிருந்து சித்திரவதையை இல்லாதொழிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதேவேளை சித்திரவதை தொடர்பாக எழும் பிரச்சினைகள் காலக்கிரமமாக ஆணைக்கழுவிற்கும் பொலிஸ் மாஅதிபரிற்கும் இடையே ஒழுங்கு செய்யப்படும் கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்டு உரிய தீர்மானங்கள் எடுக்கபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 13. ஆணைக்குழுவின் சொந்தப் பிரேரனை மூலமான விசாரணை (Own Motion)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சொந்தப் பிரேரனை மூலம் விசாரணை செய்யும் அதிகாரம் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14 இற்கமைய வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள் மற்றும் ஏதேனும் வழியில் உரிமை மீறப்படல் / மீறப்படவுள்ளமை கண்டறியப்பட்டால் முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெறாமலேயே ஆணைக்குழுவானது விசாரணைகளை தன்னிச்சையாக முன்னெடுக்க முடியும். இம்முறைமை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விரைவாக தலையீடு செய்வதற்கு ஆணைக்குழுவிற்கு வாய்ப்பாகவுள்ளது.

உதாரணம் :

- வெலிவேரியாவில் ஏற்பட்ட தண்ணீர் பிரச்சினை
- புகைவண்டி பாதுகாப்பு கடவை தொடர்பான பிரச்சினை
- 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றினை சிறுவர் தினமான ஒக்டோபர் 1 ஆம் திகதி வெளியிட்டமை தொடர்பான பிரச்சினை
- உயர்தரப் பரீட்சையில் Z புள்ளித்திட்டம் தொடர்பான பிரச்சினை
- பல்கலைக்கழகத்திற்குள் உட்பபுகும்ணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி
- அரச மும்மொழிக்கொள்கை அமுல்படுத்தாமை தொடர்பான பிரச்சனைகள்
- பேருவளை சம்பவம் தொடர்பான தலையீடு

## 14.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்க சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச பிராந்திய நிறுவனங்களுடன் இணைந்த செயற்படுதல்.

### 14.1 அரச அமைப்புக்கள்

இலங்கை அரசானது பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு ஏற்று அங்கீகரித்துள்ளது. அவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளிற்கு அமைய செயற்பட வேண்டிய கடப்பாடு அரசுக்குள்ளது. அரசாங்கமானது நாட்டினுள் சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்தத் தேவையான சட்டம், நிர்வாக, கொள்கை மற்றும் நிறுவனங்களை உருவாக்குதல் வேண்டும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 (ஈ) இற்கமைய ஆணைக்குழுவானது நாட்டினுள் இடம்பெறும் பல்வேறு மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் தகவல்களைப் பெற்று பொருத்தமான அரசாங்க அதிகாரவமைப்புக்களுடன் கலந்துரையாடல்களைச் செய்து அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை மற்றும் விதப்புரைகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும். அதுமட்டுமல்லாது அரசாங்கமானது சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களிற்கு அரசாங்கத்தின் அறிக்கையை தயாரிக்கும்போது ஆணைக்குழுவானது ஆலோசனை வழங்குவதுடன் உதவியும் செய்கின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அடிப்படை உரிமைகளை முன்னெடுத்துச் செல்லவும் ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் சட்டவாக்க நிர்வாக பணிப்புரைகளையும் நடபடிமுறைகளையும் தொகுப்பதற்கு அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குகின்றது.[13]

### 14.2 சிவில் சமூக அமைப்புக்கள்

சிவில் சமூக அமைப்புக்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னெடுக்கவும் பரந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

பரீஸ் கோட்பாட்டிற்கு அமைய தேசிய மனித உரிமைகள் நிறுவனம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் மனித உரிமைகளை விருத்தி செய்வதற்கு இணைந்து செயற்படல் வேண்டுமென வலியுறுத்துகின்றது. இவ்வாறான சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்வதுடன்

---

[13] 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்கழுச் சட்டத்தின் பிரிவு 10 (இ)

ஒருவருக்கொருவர் தகவல்களை பரிமாறிக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை செய்வதற்கு சிவில் சமூகங்களுக்கு இயலும். மேலும் சர்வதேச ஆவணங்கள் மற்றும் தராதரங்கள் மற்றும் நாட்டினுள் உள்ள விசேட பிரச்சனைகளின்போது அக்காரணங்கள் தொடர்பாக ஆணைக்குழு மற்றும் சிவில் சமூகத்துடன் சமாதானமான முறையில் கலந்துரையாடி அரசுக்கு கருத்துக்களை முன்வைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

### 14.3 சர்வதேச அமைப்புக்கள்

சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைவாக ஒவ்வொரு மனித உரிமைகள் அமைப்புக்கும் சுயாதீனமான அறிக்கையினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அனுப்பி வைக்க முடியும்.

உதாரணமாக பூகோள காலாந்த இரண்டாவது மீளாய்வு அறிக்கையின் போது ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட சுயாதீனமான அறிக்கையை குறிப்பிடலாம்.சர்வதேச அமைப்புக்களுடன் கொண்டுள்ள உறவானது விசேட அறிவு, திறன், நிபுணர்களின் பங்களிப்பு மற்றும் நிதியுதவி போன்றவற்றினை

பெறக்கூடியதாகவுள்ளது. பொதுவான பிரச்சினைகள் தொடர்பாக தகவல் மற்றும் அறிவினை பரிமாற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

### 14.4 பிராந்திய அமைப்புக்கள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அமைப்புக்களுடன் நெருக்கமான உறவினைப் பேணிவருகின்றது

#### 14.4.1 ஆசிய பசுபிக் அமைப்பு

1996 உருவாக்கப்பட்ட ஆசிய பசுபிக் அமைப்பில் 2007 இலிருந்து அங்கத்தவராகவுள்ளது. இவ் அமைப்பு அங்கத்துவ நாடுகளிற்கு

- குறித்த நாட்டில் மனித உரிமைகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் ஆதரவு அளித்தல்.
- சர்வதேச தராதரங்களிற்கமைய சுயாதீன தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை தாபிப்பதற்கு அரசுக்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கும் உதவுதல்.

- பிராந்தியமற்றும் சர்வதேச மனித உரிமைகள் பிரச்சனைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். போன்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

### 14.4.2 பொதுநலவாய நாடுகளின் செயலகம் - மனித உரிமைகளின் அலகு

பொதுநலவாய அங்கத்துவ நாடுகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் முன்னேற்றல் மற்றும் மதிப்பளித்தல் ஆகியவற்றை வலுவூட்டும் நடவடிக்கைகள் இதனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசேடமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளுமையை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய விசாரணை மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிகளை ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## 15.0 ஆணைக்குழுவின் வகைசொல்லும் பொறுப்பு

ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றம் மற்றும் நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டியது ஆணைக்குழுவின் பொறுப்பாகும். இதனூடாக ஆணைக்குழுவானது வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து கொள்கின்றது.

### 15.1 ஆண்டறிக்கை

1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் பிரிவு 30 இற்கமைய ஆணைக்குழுவானது ஒவ்வொரு வருடமும் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து வருகின்றது.

### 15.2 ஆவணப்படுத்தும் நிலையம் / நூலகம்

ஆணைக்குழுவினால் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வு அறிக்கைகள், பல்வேறு மனித உரிமை விடயங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான வெளியீடுகள் பொது மக்கள் பார்வையிடுவதற்கு ஏற்ற வகையில் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் ஆவணப்படுத்தும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## 15.3 இணையத்தளம்

ஆணைக்குழு தொடர்பாக மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தகவல் தொழில் நுட்ப அடிப்படையில் ஆணைக்குழுவின் இணையத்தளம் (www.hrcsl.lk மும்மொழிகளிலும் இயங்குகின்றது.

## 16.0 ஆணைக்குழுவை அவமதித்தல் குற்றம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு எதிராக அல்லது அதனை அவமரியாதை செய்யும் முகமாக கீழ்காட்டப்பட்ட தவறான செயற்பாடுகள் உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கு எதிராக அல்லது அதனை அவமரியாதை செய்த குற்றமாகக் கருத்திற் கொள்ளப்படும்.[14] அவையாவன,

- ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக அவமரியாதை செய்தல்
- ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிராக ஏதேனும் வழிகளில் செய்யப்படும் அவமரியாதை
- ஆணைக்குழுவின் அழைப்புக்கட்டளைக்கு நியாயமான காரணங்களின்றி ஆணைக்குழு முன் தோன்றத்தவறல்
- சத்தியம் செய்ய அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத்தல் மற்றும் ஆணைக்குழுவால் விசாரணை செய்யப்படும் பிரச்சனை தொடர்பாக மறுமொழி வழங்க தவறல்
- ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவித்தல் அல்லது எழுத்தினாலான கட்டளை அல்லது பணிப்புரையை இணங்கியொழுக மறுத்தல்
- ஆணைக்குழுவின் விசாரணைக்கு அவசியமான ஆவணங்களை அல்லது வேறுபொருட்களை காண்பிப்பதற்கு காரணமின்றி மறுத்தல்

---

[14] 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுச் சட்டத்தின் பிரிவு 21

## 17.0 ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கான விசேட பாதுகாப்பு

ஆணைக்டுழுவின் உத்தியோகத்தர்கள் அல்லது சேவையாளர்களினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தாக்கல் செய்ய முடியாது.[15]

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் ஆவணம் அல்லது ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படும் ஏதேனும் அறிக்கை சம்மந்தமான குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையை ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் அல்லது சேவையாளர்களிற்கு எதிராக தொடுக்கப்பட முடியா.[16]

## 18.0 முடிவுரை

நாட்டினுல் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றவும் நோக்காகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பரந்த செயற்பாடுகளை செய்யக்கூடிய மிக அத்தியவசியமான நிறுவனமாகும் என்பதுடன் நாட்டினுள் மனித உரிமைகள் கலாச்சாரத்திற்கு கௌரவம் வழங்கும் சமூகத்தினை கட்டியெழுப்புவதற்காக வினைத்திறனான செயற்பாடுகளை எதிர்காலத்தில் அதிகரிக்கச் செய்ய வேண்டியுமுள்ளது.

---

15 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுச் சட்டத்தின் பிரிவு 26(1)

16 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுச் சட்டத்தின் பிரிவு 26(2)(3)

## இணைப்பு I: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறைகள்

(அ) பிரதான காரியாலயம்

முகவரி : இல 165, கின்சி வீதி, கொழும்பு 08.
தொலைபேசி : 011-2694925/ 2685980/ 2685981
துரித அழைப்பு : 1996
தொலைநகல் : 011-2694924
மின்னஞ்ல் : sechrc@sltnet.lk
இணையத்தளம் : www.hrcsl.lk

தவிசாளர் : 011 2696470
செயலாளர் : 011 2689558
நீதிச்செயலாளர் : 011 2689558

பணிப்பாளர் - விசாரணைகளும் புலனாய்வும் : 011 2674200
பணிப்பாளர் - கல்வியும் விசேட நிகழ்வுகளும் : 011 2686282
பணிப்பாளர் - கண்கானிப்பும் மீளாய்வும் : 011 2673806
பணிப்பாளர் - நிர்வாகமும் நிதியும் : 011 2662098

(ஆ) **பிராந்திய காரியாலயங்கள்**

| பிராந்தி காரியாலயம் | முகவரி | தொலைபேசி இல |
|---|---|---|
| கண்டி | **8/1 றிம்ரோஸ் வீதி, கண்டி** | 081 – 2228009 |
| மாத்தறை | **15, காளிதாச வீதி, மாத்தறை** | 041 – 2226533 |
| மட்டக்களப்பு | **24, சின்னஉப்போடை வீதி, மட்டக்களப்பு** | 065 – 2224420 |
| அனுராதபுரம் | **623/20E, பிறீமன் வீதி, அனுராதபுரம்** | 025 – 2234801 |
| திருகோணமலை | **227, பிரதான வீதி, திருகோணமலை** | 026 – 2222607 |
| வவுனியா | **26/2, வெளிவட்ட வீதி, வவுனியா** | 024 – 2222029 |
| பதுளை | **19/1B, துலபிட்டிய வீதி, பதுளை** | 055 – 2223030 |
| அம்பாரை | **4ம் மைல் கல், உஹண வீதி, ஹெறன்காவ, அம்பாரை** | 063 - 2222340 |
| கல்முனை | **161/1, பிரதான வீதி, கல்முனை** | 067 – 2229728 |
| யாழ்ப்பாணம் | **1,3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்** | 021 – 2222021 |

(இ) நடமாடும் காரியாலயம்

| **நடமாடும் காரியாலயம்** | **முகவரி** | **தொலைபேசி இல** |
|---|---|---|
| கிளிநொச்சி | இல. 6, காதார வைத்திய அதிகாரி பணிமனை, கிளிநொச்சி | **021-2222021** |
| புத்தளம் | பழைய மாநகரசபைக் கட்டிடம், குருநாகல் வீதி, புத்தளம் | **071-5663455** |
| நுவரேலியா | பழைய கச்சேரி கட்டிடம், நுவரேலியா | **081- 2228009** |

இணைப்பு II : ஆணைக்குழுவின் வெளியீடுகள்

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| 1. | The Human Rights Situation in the Eastern Province (December 2003) The report of a fact – finding mission undertaken by the Human Rights Commission of Sri Lanka (2003) | | | ✓ |
| 2. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணாமல் போனோர் தொடர்பான குழுவின் அறிக்கை | ✓ | ✓ | ✓ |
| 3. | சிறுபான்மையினர் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் (2003) | ✓ | ✓ | ✓ |
| 4. | மதச் சிறுபான்மையினர் (2003) | ✓ | ✓ | ✓ |
| 5. | சிறுபான்மையினரின் உரிமைகளும் சமாதான முயற்சிகளும் | ✓ | ✓ | ✓ |
| 6. | சமநல பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் ஐக்கிய நாடுகளின் மற்றும் ஏனைய சர்வதேச சட்டங்களும்(2003) | ✓ | ✓ | ✓ |
| 7. | சித்திரவதையில்லா சமூகம் சித்திரவதை இல்லாதொழித்த தொடர்பான சட்ட நிலைமை (2003) | ✓ | | |
| 8. | Legal Analysis of Property Issues Affecting Internally Displaced Persons and Refugees of Sri Lanka (2004) | | | ✓ |
| 9. | The Right to Health and the “crisis” at General Hospital Anuradhapura (2004) | | | ✓ |
| 10. | Human Rights Report Methsevana State House of Detention Gangodawila (2004) | | | ✓ |
| 11. | Contempt of Court: The Need for Substantive cum Procedural Definition and Codification of the Law in Sri Lanka (2004) | | | ✓ |
| 12. | சிறுவர் உரிமை தொடர்பான அறிமுகம் | ✓ | ✓ | |
| 13. | Human Rights : Theory to Practice (2005) | | | ✓ |
| 13. | The Human rights Situation in the Eastern Province Update (April 2005) The report of a fact – finding mission undertaken by the Human rights Commission of Sri Lanka (2005) | | | ✓ |
| 14. | Report of the Women’s Division: Disaster Relief Monitoring Unit (2005) | | | ✓ |
| 15. | Report on the National Conference on Disability Rights (2006) | | | ✓ |
| 16. | Human Rights Impact of Post Tsunami Policies Report on Pilot Study in Ampara and Galle Districts(2006) | | | ✓ |
| 16. | Right To Education of Internally Displaced Persons (2007) | | | ✓ |
| 17. | Report of the Committee on the Rights of Women Migrant Workers (2007) | | | ✓ |
| 18. | பெண்களுககு எதிரான பாரபட்சத்தினை இல்லாதொழித்தல் (2009) | ✓ | | |

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| 19. | விசேட தேவையுடையோரின் மனித உரிமைகள் | ✓ | | |
| 20. | கௌரவத்துடனான வாழ்க்கை | | | ✓ |
| 21. | Right to Health of Internally Displaced Persons (2009) | ✓ | | ✓ |
| 22. | Ensure Best Interest of the Child: General Guidelines to the State Officials Who Deal with all forms of Child Related Issues, on Juvenile institutionalization (2009) | ✓ | ✓ | ✓ |
| 23. | சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் ரோம் விதிமுறைகளும் | ✓ | | |
| 24. | மனித உரிமைகள் ஆவணங்கள் | ✓ | ✓ | |
| 25. | கைதின் போது ஏற்பட்ட மரணம் அங்குலான பொலிஸ் நிலையம் | ✓ | | |
| 26. | கண்போலக் காப்போம் | | ✓ | |
| 27. | அரச நிறுவனங்களில் பெண்களுக்கு இடம்பெறும் பாலியல் தொல்லைகளுக்கு எதிரான கொள்கை வழிகாட்டல்கள் | ✓ | ✓ | ✓ |
| 28. | தேர்தல் வழிகாட்டல்கள் | ✓ | ✓ | ✓ |
| 29. | தேர்தல் பொதுப் பரிந்துரைகளும் வழிகாட்டல்களும் | ✓ | ✓ | ✓ |
| 30. | மரண தண்டனை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வு | ✓ | ✓ | ✓ |
| 31. | தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பற்றி அறிந்துகொள்வோம் | ✓ | ✓ | |
| 32. | Growing Old Gracefully (2014) | | | ✓ |

***கையேடு***

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எங்களுடைய உரிமைகளை அறிந்துகொள்வோம் | ✓ | ✓ | ✓ |
| 2 | சித்திரவதையை இல்லாதொழிப்போம் | ✓ | ✓ | ✓ |
| 3 | அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் | ✓ | ✓ | ✓ |

***சுவரொட்டிகள்***

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சந்தேகநபர்களின் உரிமைகள் | ✓ | ✓ | ✓ |
| 2 | மனநோயுடைய ஆட்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான கோட்பாடுகள் | ✓ | ✓ | ✓ |